## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 61/2023

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 10.11.2025</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.இளவரசன் (PW 1) | வயது | : | 53/2025 |
| க/த பெயர் | : | திரு. சுப்ரமணி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | காஞ்சிகுடிகாடு | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் தகப்பனார் காயரோகனம் களப்பாடியார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 0.09.5 ஏர்ஸ் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 3ம் பிரதிவாதியின் தகப்பனார் காயரோகனம் களப்பாடியார் தாவா சொத்தினை கிரயம் வாங்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.
2) எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்பதில் பிரச்சனை என்றால் சரிதான். பிரதிவாதிகள் நான்கு பேரும் தாவா சொத்து சம்பந்தமாக என்னிடம் பிரச்சனை செய்கிறார்கள் என்பது எனது கட்சி என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் தாவா சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழில் 3ம் பிரதிவாதியின் தகப்பனார் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **(அந்த வில்லங்க சான்றிதழ் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
3) வா.சா.ஆ.1 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்தில் எந்த மூல ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து கிடைக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பட்டா மிராசுடன் அனுபவத்துடன் வருவதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அதில் பட்டா இணைக்கவில்லை என்றால் சரிதான். 1960–1970 காலக்கட்டத்திற்கான அடங்கல் ஆவணத்தை எடுத்து பார்த்தால் தாவா சொத்து யார் அனுபவத்தில் இருந்து வந்தது என்பதற்கான விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

4) தாவா சொத்துக்கள் எனது தந்தையாருக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதற்கான எந்தவித மூல ஆவணத்தையும் தாக்கல் செயய்வில்லை என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே தாவா சொத்து சம்பந்தமாக முதல் முறையாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் 09.08.2023. நான் பிரச்சனை ஏற்பட்டதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன்பேரில் போலிசார் விசாரித்தார்களா எனறால் அன்றைய தினம் மாலை நேரம் விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை அவரது ஆவணத்தின்படி அனுபவித்து வருவதாகவும் நான் எனது ஆவணத்தின்படி அனுபவித்து வருவதாகவும் சொல்லியதால் இது சொத்துக்கான உரிமை மூலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்பதால் நீதிமன்றம் மூலம் தீர்வு காணுமாறு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அதனால் சொத்து எனக்கு மட்டுமே சொந்தம் என்றும் பிரதிவாதிகளுக்கு உரிமை எதுவும் இல்லை என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5) காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எவ்வளவு நாட்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1 வாரம் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் வைத்துள்ள ஆவணம் தவறானது என்றும் என்னுடைய ஆவணம் தான் சரியானது என்று தான் பரிகாரம் வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்து தொடர்பாக ஆவணங்கள் இருந்தால் தாவா சொத்து யாருக்கும் சொந்தம் என்று விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

6) எனது தாத்தா பெயரில் பட்டா இருந்ததால் தாவா சொத்து எனது பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3ம் பிரதிவாதியோ அல்லது அவரது முன்னோர்களோ தரப்பினர்களாக இல்லாததால் 3ம் பிரதிவாதியை பொறுத்து கட்டுப்படுத்தக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி அதன்பேரில் பொய்யான தகவலை கொண்டு வழக்கு தாக்கல் செய்து அதன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ.2 ஆவணமான போட்டா, சிடி ஆகியவை வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கோருகின்ற பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. உண்மையான

நிலவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.12 11:34:37 +0530

District Munsif
Mannargudi.